# கல்விச் செல்வம்

க.கோவேந்தன்

# கல்விச் செல்வம்

தொகுப்பாசிரியர்

**த. கோவேந்தன்**

**வண்ணக்களஞ்சியம்**

165 லாயிட்சு சாலை

சென்னை -600014

முதற்பதிப்பு—சனவரி-14.—1976.
உரிமை—பதிப்பகத்தார்க்கே.

விலை 2.00

அச்சிட்டது:
திருப்பூர் அச்சகம்
சென்னை-24



கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

# உங்களுடன்....

கல்வி சிறந்த தமிழ்நாடு உயர்கம்பன்பிறந்த தமிழ்நாடு என்று மகாகவி பாரதியார் பாடினார். கல்வியின் சிறப்புகளைப்பற்றி இலக்கியங்களிலிருந்தும் பல்வேறு அறிஞர் பெருமக்களின் கவிதைகளிலிருந்தும் மிக அருமையாக **த. கோவேந்தன்** அவர்கள் தொகுத்தளித்திருக்கிறார் இன்றைய அறிஞர்கட்கும் இளைஞர்களுக்கும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் பெரிதும் பயனளிக்கும் எனப் பெருமையோடு வண்ணக்களஞ்சியம் இந் நூலை வெளியிடுகிறது.

இப்படி ஒரு தொகுப்பு நூல் வெளியிட வேண்டுமென்பது நீண்ட நாளைய எண்ணம், அந்த நல்ல எண்ணம் ஈடேறி வெளிவந்து, பள்ளி மாணவ மாணவியர்களின் பிஞ்சுள்ளங்களில் தவழும் இந்த இன்பநாள்தான் வண்ணக் களஞ்சியத்திற்கு பெருமை சேர்க்கும்நாள்.

இந் நூலைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் அறிவுக் களஞ்சியமாகத் திகழப் பெரிதும் விழைகிறோம்.

தொகுத்தும், அச்சிட்டும் உதவிய ஆசிரியருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்றோம்.

வணக்கம். நன்றி.

**வண்ணக்களஞ்சியம்**



கல்வியறிவில்லாவிட்டால் கோடிக்கணக்கான மக்களுக்குத் தன்னையறியும் சக்தியே இல்லாது போய்விடும்.

—o—

பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் தொழிற்சாலைகள் போன்றவை அங்கே உயர்ந்த பண்புள்ள மனிதத்தன்மை என்ற அருமையான பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

—o—

படித்தவர்கள், படிக்கத்தெரியாதவர்களுக்குப் படிக்கவும், எழுதவும் கற்றுக் கொடுக்கவேண்டும்

**மகாத்மா காந்தியடிகள்**

# முன்னேற்றம்!

இன்னருங்கனிச் சோலைகள் வைத்தல்
இனியநீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

என்று பாரதி ஆயிரம் அறங்கள் செய்து வந்த நாட்டிலே, தான் மக்கள் எழுத்தறிவுக்கல்வி இல்லாமையை எண்ணி வருந்தினான்.

அண்ணல் காந்தியடிகளும் ஏழைக்குத வாத கல்வி கல்வியே அன்று; கல்வி குடி புக வேண்டிய முதலிடம் ஏழைகளின் குடிசைகளில் தான் என்று வலியுறுத்தினார்.

பயிருக்கு நீர் எவ்வளவு இன்றியமையாத் தேவையோ அப்படியே மனித உயிருக்குக் கல்வியும் தேவை என்பதைத் திட்டமிட்டுச் செயல் படுத்தினார் நேரு.

இந்தியாவில் பலருக்கும் கிட்டாது செல்வர்க்கே கிட்டும் ஓர் அரும்பொருளாக கல்வி இருந்து வந்தது. இன்னும் சொல்லப்

போனால் குறிப்பிட்ட ஒரு சிலர்க்கே என்னும் தனியுரிமையாக இருந்துவந்தது.

உழைப்பவர்க்குப் படிப்பதற்குரிய வாய்ப்பை எட்டாமலே செய்தனர் செல்வரும் மேல் குடியினரும். அதனை உடைத்தெரிந்தது இந்திய விடுதலை.

கல்வி என்பது கிட்டாத கனவாக எட்டாத கனியாக இருந்தகாலம் மறைந்து, 1947 உரிமைக்குப் பின் அனைவருக்கும் கல்வி கிடைக்க அரசு ஊர்தொறும் பள்ளிகள் திறந்தன,

மக்கள் தம் வாய்மொழியின் எழுத்துகளை தாய்மொழியின் அழகைக் கண்ணாரக் கண்டனர், எழுதுகோலும், தாளும், புத்தகங்களும் அவர்கள் முன் கொண்டுவரப்பட்டன.

படிப்பின்மையைத் துடைத்தெறிய அறிஞர்களின் தொண்டு எண்ணிலடங்கா.

ஆணும் பெண்ணும் சரிநிகராகக் கல்வியைக் கற்க நாட்டின் தலைவர்கள் திட்டம் தீட்டினர்.

கடந்த முப்பது ஆண்டுகளில் பல்வேறு கால கூட்டங்களில் அறியாமை நோய் ஐம்பது விழுக்காடு துடைத்தெறியப்பட்டது.

முன்பு ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்டவர்கள் அனைவரும் கல்வியின் ஒளியைப் பெற்றனர்.

உழைப்பாளி மக்களும் பாட்டாளித் தோழர்களும், தொழிலாளர்களும் பள்ளிக் கூடங்களிலும், தொழில் நுட்பக் கல்வி நிலையங்களிலும் கல்லூரிகளும் தத்தம் கல்வி உரிமையைப் பெற்றனர்.

எல்லாருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு இன்று கிடைத்துள்ளது. இது மிகப்பெரிய புரட்சியாகும். அமைதியாக நடைபெறும் புரட்சி.

கல்வி இருவகைப்படும், ஒன்று தொழிற் கல்வி—மற்றொன்று மொழிக் கல்வி.

இவ்விரண்டுக் கல்வியும் எண்ணொடும் எழுத்தொடும் தொடர்புடையவை.

அறிவியல் வளர்ந்து வரும் இந்தக் காலத்திலும் சரி, அறிவியல் அவ்வளவாக வளராத இயற்கையோடொன்றிய பண்டையக் காலத்திலும் சரி, கல்விபற்றி தமிழறிஞர்களும் மக்களும் என்ன எண்ணினர், எவ்வளவு ஆழ்ந்து சிந்தித்தனர் என்று முற்போக்கிலும நற்போக்கிலும் செல்லும் நாம் ஒரு பின்னோட்டம் விட்டுப்பார்ப்பதே இந் நூலின் நோக்கம்.

நமக்குரிய ஏந்துகளைவிட, வாய்ப்புகளை விடக் குறைவாக இருந்த காலத்தில் கல்வியும் வாழ்வும் ஒன்றுபட வேண்டும்என்று திட்டமிட்ட பழங்காலப் புலவர்களின் எண்ணங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

நமது கல்வியால் நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ளவேண்டும் இதுதான் கல்வியின் கோட்பாடு.

நம்மை நாமே அறியும்போது உள்ளத்தில் புத்துயிர் புதுமலர்ச்சி பெறுகிறது. இதுதான் அறிதொறும் அறியாமை காணல்.

மொழிக் கல்வியாயினும் தொழிற்கல்வியாயினும் ஒவ்வொரு நொடியும் நம்முள் புகப் புகப் புதுமை பொலியும் வாழ்க்கையின் உண்மைப்பொருள் வற்ருத ஊற்ருகப் பெருகும்.

எவன் எதனுல் நிறைவடையாதவனுய் எப்பொழுதும் உண்மையைக் காணவிழைப்படுவாஞே அவனே கல்வியைத் தேடுபவனுவான்.

இப்படிச் செல்பவன் தனிமனிதனுகி சமூகமாகி இந்த உலகையே மாற்றும் மாபெரும் மாந்தனுகிவிடுகிருன். இந்த மூல மாறுதலைத் தருவது கல்வியே.

கல்வியின் தொடர்பை உணரமேண்டுமாளுல் அதனைக் காலமும் உதரித்தள்ளாமல் அதனை விட்டு நீங்காமல் அதனை முழுதும் அறிந்துகொள்ள நமது ஆர்வச் செயலனைத்தையும் அதற்கே திருப்பவேண்டும்.

ஆதலால்தான் காந்தியடிகள் கல்விபற்றி கூறுகையில் :

''குழந்தையாயினும் சரி, வயது முதிர்ந்தோராயினும் சரி அவரவரிடத்துள்ள ஆற்றல்கள்

அத்துணையும் (உடல், உள்ளம், ஆன்மா) வளர விடுவது எதுவோ அதுவே கல்வி ''—என்றார்.

மனிதனின் மாண்பை விளக்குவது கல்வி மனிதனின் கற்பனைத் திறனுக்கும், நம்பிக் கைக்கும், குறிக்கோளுக்கும் அடிப்படை யாகும்.

மக்களை மாக்களின் நிலையிலிருந்து வளர்த் ததும் நாகரிகத்தின் உண்மையின் ஊற்றுக் கால்களைக் கண்டு பிடித்ததும் கல்வியே.

மனிதன் தன் கண்ணுக்குக் கல்வியாகிய ஒளியைத் தரவில்லையானால், ஒளி உலகத்தி லும் அவன் குருடனாகவே வாழ்ந்திருப்பான்.

உலகத்தில் எண்ணற்ற மொழிகளைப் படைத்து அதனைக் கருத்தின் கருவியாக்கிய பெருமை மனிதனையே சாரும்.

மக்கள் எப்படி உருவானார்கள் என்ற கல்வியைத் தருவதும் கல்வியே.

ஒன்றேகுலம், ஒன்றே உலகம் என்று ஒற்றுமைக்கும் ஊன்றுகோலாய்இருந்து அனைத் துலகையும் ஓர் ஆளுமையின் கீழ்க்கொண்டு வருவதும் கல்வியே.

கல்வியால் மனிதனின் அறிவு மேம்பாட் டைவதும் ஒழுக்கம் உயர்வதும், பண்பாடு செழிப்பதும், வாழ்வின் ஒவ்வொரு துறையும் வளமுறுவதும் நாம் அறிந்ததே.

அந்தக் கல்வி பற்றிய நமது முன்னோர்கள் முதல் தற்காலத்தவர் வரை எண்ணியு

எண்ணங்களைச் முத்துக்களாகத் தந்துள்ளனர் நமது ஆன்றவிந்தடங்கிய சான்றோர்.

அந்தக் கல்விப் பற்றிய சிந்தனைச் செழுமைகளை எல்லாம் ஒருங்கு தொகுத்து **கல்விச் செல்வம்** என்ற பெயரால் தமிழர்கட்கு நாங்கள் வழங்குகிறோம்.

கல்விப் பேருண்மையைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர்கள் கண்டனர். அதனையே மக்களுக்கு விண்டனர். தம் கொள்கையே வெற்றிபெறும் என்று கோட்பாட்டைக் கொண்டனர்.

கல்வியில் மாற்றங்களையும் சீர்த்திருத்தங்களையும் உலகனைத்தும் காணவிழைகிறது. இந்தியாவிலும் தமிழகத்தில் கல்விச் சீர்திருத்தம் முறுக்கேறி வருகிறது.

இந்த நல்ல நேரத்தில் ஆறு ஏழு ஆண்டுகட்கு முன்பு சங்க கால முதல் தற்காலம்வரை கல்விபற்றியசிந்தனைகளைத் தொகுத்து தோழர் இரவியிடம் அளித்தேன்.

தோழர் இரவி இதற்கு உரையும் வேண்டும் என்று பணித்தார். எனக்குள்ள ஒய்வற்ற சூழலில் இதனைத் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்து விட்டேன்.

கல்விச்சிந்தனை உரியகாலத்தில் வெளிவர வேண்டும் என்ற வேட்டைக்குக் குறுக்கே நிற்காமல் பாடல்களைத் தெளிவாகப்பிரித்து வெளியிட முன்வந்தேன்.

**எளிமையினால் ஒருதமிழன்**
**படிப்பில்லை என்றால்**
**இங்குள்ள எல்லோரும்**
**நாணிடவும் வேண்டும்**—எனும்

பாவேந்தரை நினைத்துக்கல்வி முறையில் செய்ய **வேண்டிய** சீர்திருத்தங்கட்டு **இந் நூல் உதவி புரிக.**

அன்பன்,

**த. கோவேந்தன்.**

# கல்விச் செல்வம்

# கல்விச் செல்வம்

## திருக்குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ் விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு.

கண்ணுடையர் என்பவர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாத வர்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

யாதானும் நாடாமால், ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத ஆறு.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனையவர்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால்.

நவில்தொறும் நூல்நயம்.

## இராதாகிருட்டினன் கல்வியும் கலையும்

தலைமையிடம் கல்விக்குத் தாரோமேல் நாட்டில்
நிலையாது மக்களாட் சி.

அறிவு திறமை பெறுவதா கல்வி?
பிறருடன் ஒத்துவாழ வே.

அறிவை வளர்ப்பதுடன் உள்ளத்து அருளை
குறித்தூட்டல் கல்விப் பயன்.

சமையம், இலக்கியம் மெய்ப்பொருளைக் கற்றபின்
அமையும் அறிவின் வளம்.

உள்ளத்தை உள்ளுயிரை ஒட்டாக் கலைக்கல்வி
கொள்ளாது வாழ்வில் நிறை

சீர் சிறந்த நூலைப் பயில்வது; சீர் சிறந்த
உள்ளத்தோடு ஆடலும் ஆம்.

பல்கலை மன்றங்கள் பண்பாட் டுறைவிடங்கள்
கல்விமட்டும் காட்டல் இலை,

உடலோம்பும் கல்வி புறக்கணிக்க ஒண்ணு
திடவாழ்வின் தேவை கலை.

கல்வியின் மேன்மைத் தரத்தினைக் கண்டறிதல்
நல்லபணி நாட்டினுக் கு.

நீண்டநாள் கற்ப தினும்நீள் அறிஞரொடும்
மாண்புரையால் எய்தும் மதி.

ஓருலகாய் மன்பதை வாழ இளைஞர்க்கும்
சீர் கல்வி சேர்த்தல் சிறப்பு.

## காந்திமொழிக்குறள்

கதிரொளிபோல் கால மழைபோல் பொதுவாய்
உரிய தெவர்க்கும் கல்வி.

எழுத்தறி வென்பதே கல்வியின் உண்மைக்
கருத்தாம் கருவி அது.

நன்னடத்தை தன்னை நமில்வளர்ப்ப தொன்றே
முதற்கடமை கல்வி தனக்கு.

பிறமொழி ஊடே நாம் கல்வி பெறுதல்
உறவிலா அல்லல் உளது.

பிறமொழி மூலம் பெறப்படும் கல்வி
துறப்பிலாத் துன்பம் தரும்.

மெய்யறிவைப் பேணு மிகைநூல் அறிவனைத்தும்
மெய்யெனல் பாழ்படுத் தல்.

ஆண்பெண் இருவர்க் களிக்கும்நல் கல்வியில்
பேணுக வேற்றுமைப் பீடு.

கல்வியே தன்னுரிமை நாட்டின் திறவுகோல்,
கல்விஇலை யேல்உரிமை இல்

நெறியான கல்வி முறையின்றேல் இல்லை
சிறப்பிக்கும் செய்தொழிற்கல் வி.

கல்வி எனநாடும் கல்வித் துறைகளில்
மல்கி யுள்ளது இன்னல் மதி

சிற்றூர் எழில் காட்சி காணச் சிறப்பாகக்
கற்பிக்கும் கல்வி அவம்,

கைத்தொழில் இல்லாத கல்வியும் கல்வியா?
பைத்தியம் ஆண்பெண் பிழைப்பு.

ஐம்பொறிக்கும் ஆன்ற பயிற்சி கொடுப்பதே
செம்மை அறிவுத் திறன்.

அகத்தும் புறத்தும் ஆன்ற பயிற்சி கொடுப்பதே
செம்மை அறிவுத் திறன்.

பிள்ளைகளைத் தண்டிக்கா வண்ணம் தரும்கல்வி
கொள்வதே ஆசிரியர் கோள்.

உடற்பயிற்சி, ஓவியம், கைத்தொழில் பாட்டோடு
இடம்கொளல் கல்விக் கழகு.

தாய்மொழியின் ஊடே தரும்கல்வியே கல்வி,
பேய்மொழியாம் பற்பல நூல்.

புத்தகக் கல்வியால் புத்துணர்வைப் புத்தறிவைப்
புத்தெழுச்சி கொண்டடைதல் பொய்.

நல்லபல செய்திகளை நாற்றிசையில் உண்டுவப்போன்:
கல்வியைக் கற்பான் எளிது.

வீடுகளில் தயார் வழியில் விழுமிய
ஏடறியாக் கல்வி எழும்.

பிறரினும் தாயே குழந்தைக்குக் கல்வி
திறம்பட ஊட்ட முடியும்.

இலக்கியக் கல்வியில் மாந்தன் இயல்பு ஓர்
அலகும் உயர்வ திலே.

கல்வி கருவியே அன்றி குறிக்கோளிலை
நல்ல, ஒழுக்கமே கல்வி.

அளவுக்கு மீறிய கல்வியால் மூளை
தளர்ந்தழுலிப் போயிற்றே தாழ்ந்து

கல்வி உலகுரிமை, ஆதலால் கல்வியை
எல்லார்க்கும் செய்க பொது.

பண்பு மேம்பாடே பயனளிக்கும்; மாந்தர்க்குக்
கொண்டூட்டும் கல்விப் பணி.

ஒழுக்கம், வலிமை, துணிவை உயர்த்தும்
விழுப்பமே கல்வி விருந்து.

உடல் உழைப்போடு ஒன்றும் உணர்வுஆர்ந்த கல்வி
திடப்படுத்தும் நுண்ணறிவைத் தேர்ந்து

எழுத்தறியும் கல்வி இளமையில் ஆண், பெண்
வழித்துணை வீணுக் கிலை

எழுத்தறிவோடு ஆன்ற தொழிலினும் இணைத்தல்
முழுக்கல்வி ஆகும் முனை.

எங்கே ஒழுக்கம் இடறுமோ அங்கேநல்
கல்வி மணம்கமழ்தல் இல்.

கல்வி முறைக்கும்நம் வாழ்க்கை முறைக்கும்ஒரு
புல்லும் முறைஒன்றி லை.

வாழ்க்கையின் எல்லாத் துறைக்கும் பொருத்தமுறும்
ஆழ்உணர்வைத் தூண்டலைகல் வி

ஒவ்வொரு வீடும் கலைப்பள்ளி, ஆசிரியர்
செவ்விய பெற்றோர்க ளே!

எளிய சிறிய நலனையும் ஈயாத
கல்விஒரு கல்விஆ கா.

நம்மில் உறங்கும் அறிவை வெளிக்கொணரும்
நெம்புகோள் ஆசிரியர் கள்.

ஆங்கிலக் கல்வி முறையால் அடிமையாம்
தீங்குற்றோம் ஆண்மைஇழந் தோம்.

ஆங்கிலம் வைய மொழி எனினும் ஆகாதே
பாங்குறும் தாய் மொழிபோல் பாங்கு.

தன்னைத் தான் மேம்படச் செய்வதே சால்புடை
நன்னயக் கல்விப் பயன்.

அக்கறை இன்றி இலக்கியம் கற்பதினும்
சிக்கல் மொழிப் பிழையைத் தீர்

கல்வி அறிவோடு உடல் ஓம்பல் கொள்வதே
நல்ல பயிற்சி முறை.

படிப்பறிவு பாழ்ப்படின் மக்கட்கும் தம்மைப்
படித்தறிதல் இல்லாமற் போம்.

இயற்கை அறிவை இனிதாக்கிக் கூர்மை
மயமாக்கல் கல்விப் பணி.

ஏழைக்கு இடமில்லா இன்கல்வி மாளிகைகள்
வாழினும் வீழினும் என்?

நாம் பெறும் கல்வி நமதுவாழ் வோடு ஒத்தது
ஆமாயின் மேன்மை அது.

பள்ளிக்கும் பல்கலை மன்றுக்கும் சென்றால் தான்
கல்வி வளருமெனல் தப்பு.

பள்ளியில் பிள்ளைகள் அச்சம் அகற்றுவதே
கொள்ளும் முதற்கண் படிப்பு.

உடலுழைப்பின் மூலமே பிள்ளைகட்குக் கல்வி
எடுபடும்வே றில்லை வழி.

புத்தகங்கள் மூலமே புத்தறிவைக் கொள்ளல் எனல்
முற்றிலும் மூடத் தனம்.

ஒழுங்குடன் ஓங்கும் குடும்பத்துப் பிள்ளை
தொழும் கல்வி தூக்கும் சிறந்து.

தாய் மொழிக்கு உண்மைத் தலைமை தராத்திட்டத்
தேய்வுறும் கல்வித்திட் டம்.

மாணவரின் ஊட்டேயும் மற்றைப் பொழுதினும்
மாண்பு ஒழுக்கம் ஆசிரியர் மாண்பு.

மாணவன் என்னல் புலன் அழுக்கு அற்றசீர்
ஆனவன் என்னும் அறம்.

## பாவேந்தர் ஆத்திசூடி

ஓவியம் பயில்
கல்லார் நலிவர்
கேட்டு விடையிறு
நுண்ணிதின் நுண்மை தேர்
முகச்சரக்காய் வாழ்.

## பாரதி புதிய ஆத்திசூடி

கற்றது ஒழுகு
நீதி நூல் பயில்
நூலினைப் பகுத்துணர்
மீளுமாறு உணர்ந்துகொள்
உலோக நூல் கற்றுணர்
வான நூற் பயிற்சி கொள்
வேதம் புதுமை செய்

## ஆத்திசூடி

எண்ணெழுத் திகழேல்.
இளமையிற்கல்
கேள்வி முயல்
நூல்பல கல்.
வித்தை விரும்பு

## கொன்றை வேந்தன்

கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
நிற்கக் கற்றல் சொற்றிறம்பாமை

## உலக நீதி.

ஓதாமல் ஒருநாளுமிருக்க வேண்டா

## வெற்றி வேற்கை

கல்விக்கழகு கசடற மொழிதல்

கற்கை நன்றே, கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே

## நன்னெறி

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணினிலையாம்— எழுத்தறிவார்
ஆயுங்கடவுளவிர் சடைமுன் கண்டளவில்
வீஞ்சுரநீர் மிசை

## பாவேந்தர் வெண்பா

சொட்டுக் குழம்புக்கும் சோற்றுக்கும் கையில் ஒரு
துட்டுக்கும் கண்ணயர்ந்து தூங்குதற்கும் கட்டத்
துணிக்கும் துடிக்கின்ற ஏழையையும் நல்ல
பணக்காரன் ஆக்கும் படிப்பு.

படிக்கையிலே தொல்லை இருக்கும்; படித்து
முடிக்கையிலே முற்றும் மகிழ்ச்சி. முடித்தபின்
தொட்டதெல்லாம் வெற்றி, துயரின்றி வாழலாம்
கட்டாயம் கல்வி பயில்.

கல்லாத மூடனை 'வா' என்பார், கற்றவனை
எல்லாரும் வாருங்கள் என்றழைப்பார்; செல்வம்
படிப்பானைச் சேரும்; படியான் கூழ்ப் பானை.
அடிப்பானை யும்வெறும்பா னை.

## கல்வி இல்லாவீடு இருண்டவீடு!

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடென்க!
படிப்பிலார் நிறைந்த குடித்தனம், நரம்பின்
துடிப்பிலார் நிறைந்த சுடுகாடென்க!
அறிவே கல்வியாம்; அறிவிலாக்குடும்பம்
நெறிகா ணாது நின்றபடி அழியும்.
சொத்தெலாம் விற்றும் கற்ற கல்வியாம்
வித்தால் விளைவன மேன்மை, இன்பம்.
கல்வி இல்லான் கண்இலான் என்க.
இடிக்குரல் சிங்கநேர் இறையே எனினும்
படிப்பிலாக் காலை நொடிப்பிலே வீழ்வான்.
கல்லான் வலியிலான், கண்ணிலான், அவன்பால்
எல்லா நோயும் எப்போதும் உண்டு.
கற்க எவரும்; எக்குறை நேரினும்
நிற்காது கற்க; நிறை வாழ்வு என்பது
கற்கும் விழுக்காடு காணும் பெண்கள்
கற்க! ஆடவர் கற்க! கல்லார்
முதிய ராயினும் முயல்க கல்வியில்!
எதுபொருள் என்னும் இருவிழி இலாரும்
படித்தால் அவர்க்குப் பல்விழிகள் வரும்.
ஊமையும் கற்க, ஊமை நிலைபோம்;
ஆமை போல் அடங்கும் அவனும் கற்க,
அறத்தைக் காக்கும் மறத்தனம் தோன்றும்.
கையும் காலும் இல்லான் கற்க,
உய்யும் நெறியை உணர்ந்துமேம் படுவான்
இல்லார்க் கெல்லாம் ஈண்டுக்
கல்விவந் ததுஎனில் கடைதேறிற் றுலகே!

## நாலடி

கல்வி கரையில, கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பின் பிணிபல— தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பால்உண் குருகில் தெரிந்து.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுணராக் கேடுஇன்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல— நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே; இராஅது
உரைப்பினும் நாய்குரைத்து அற்று.

பல்லான்ற கேள்விப் பயன்உணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வது அறிதிரே—கல்லாதார்
சேதனம் என்னும்அச் சேறகத்து இன்மையால்
கோதென்று கொள்ளாதாம் கூற்று.

## பழமொழி

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநாடு ஆகா தமவேயா மாயினால்
ஆற்றுணா வேண்டுவது இல்.

சொல்தொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித்து உழன்றொன்று அறியுமேல்
கற்றொறுந்தான் கல்லாத ஆறு.

ஆற்றும் இளமைக்கண் கல்லாதான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமே—ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லைமற்றில்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.

விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கமின்று என்றனைத்தும் தூக்கி— விளக்கு
மருள்படுவ தாயின் மலைநாட, என்னை
பொருள் கொடுத்துக் கொள்ளார் இருள்''.

கற்றானும் கற்றார்வாய்க் கேட்டானும் அல்லாதான்
தெற்ற உணரான் பொருள்களை- எற்றே
அறிவிலான் மெய்த்தலைப் பாடு பிறிதில்லை
நாவல்கீழ் பெற்ற கனி.

## நான்மணிக் கடிகை

திரிஅழல் காணின் தொழுவ, விறகின்
எரிஅழல் காணின் இகழ்ப — ஒரு குடியில்
கல்லாது மூத்தா னைக் கைவிட்டுக் கற்றான்
இளமை பாராட்டும் உலகு.

கற்பக் கழிமடம் அஃகும்; மடம் அஃகப்
புற்கம்தீர்ந்திவ்வுலகின். கோள்உணரும்; கோள்உணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும், அந்நெறி
இப்பால் உலகத்து இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும்

கடல்குட்டம் போழ்வர் கலவர், படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்கும் தோமில்
தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும் அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.

வாலிழையார்முன்னர் வனப்பிலான் பாடிலன்;
சாலும் அவைப்படின் கல்லாதான் பாடிலன்;
கற்றான் ஒருவனும் பாடிலனே, கல்லாத
பேதையார் முன்னர் படின்.

## சிறுபஞ்சமூலம்

பொன்பெறுங் கற்றான் பொருள்பெறும் நற்கவி
என்பெறும் [வாதி இசைபெறும் - முன்புறக்
கல்லார்கற் றார்இனத்தர் அல்லார் பெறுபவே
நல்லார் இனத்து நகை.

கண்ணுங்கால் சண்ணும் சணிதம் எழுதியாழோடு
எண்ணுங்கால் சாந்தே இலைநறுக்கிட்டு- எண்ணுங்கால்
இட்டஇவை ஐந்தும் அறிவான் இடையாய
சிட்டன்என் றெண்ணப் படும்.

சத்தமே ஞானம்; தருக்கம் சமயமே,
வித்தகர் கண்டவீடு உள்ளிட்டாங்கு- அத்தகத்து
அந்தஇவை ஐந்தும் அறிவான், தலையாய
சிந்திப்பிற் சிட்டன் சினந்து.

தேவரே கற்றவர், கல்லாதார் நேருங்கால்
பூதரே; முன்பொருள் செய்யாதார்- ஆதரே;
துன்டம், இலேம்டண்டு யாமே வனப்புடையோம்
என்பார் இருகால் எருது.

கல்லாதான் தான்காணும் நுட்பமும், காதிரண்டும்
இல்லாதான் எக்கழுத்தும் செய்தலும் - இல்லாதான்
ஒல்லாப் பொருள்இல்லார்க்கு ஈத்தளியான் என்றலும்
நல்லார் கேட்பின் நகை.

## இன்னாநாற்பது

கல்லாதான் ஊரும் கலிமாப் பரிப்பின்னா
வல்லாதான் சொல்லும் உரையின் பயன்இன்னா
இல்லார்வாய்ச் சொல்லின் நயம்இன்னா; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டிக் கொளல்.

## திரிகடுகம்

கற்றுரைக் கைவிட்டு வாழ்வதும், காமுற்ற
பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும் - முட்டின்றி
அல்லவை செய்யும் அலவலையும் இம்மூவர்
நல்உலகம் சேரா தவர்.

## ஏலாதி

இடைவனப்பும், தோள்வனப்பும், ஈடின்வனப்பும்
நடைவனப்பும், நாணின் வனப்பும், — புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணேடு
எழுத்தின் வனப்பே வனப்பு.

அறுவர்தம் நூலும் அறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாருய நீக்கி — மறுவரவில்
மாசாரியனுய் மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசா ரியனது அமைவு.

எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்:—மொழித்
திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்

## அறநெறிச்சாரம்

தேசும் திறனறிந்த திட்பமும், தேர்ந்துணர்ந்து
மாசு மனத்தகத்து இல்லாமை— ஆசின்றிக்
கற்றல் கடனறிதல் கற்ருர் இனத்தராய்
நிற்றல் வரைத்தே நெறி!

எப்பிறப்பாயினும் ஏமாப்பு ஒருவற்கு
மக்கள் பிறப்பில் பிறிதில்லை—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

மறவுரையும் காமத்து உரையும் மயங்கிப்
பிறவுரையும் மல்கிய ஞாலத்து— அறவுரையைக்
கேட்டும் திருவுடை யாரே, பிறவியை
மீட்கும் திருவுடை யார்.

இருளே உலகத்து இயற்கை, இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை.

## திருமந்திரம்

துணையது வாய்வரும் தூயநல் கல்வியே

உறுதுணை ஆவது உயிரும் உடம்பும்
உறுதுணை ஆவது உலகுறு கேள்வி.

கற்றறி வாளர் கருதிய காலத்து
கற்றறி வாளர் கருத்தில்ஓர் கண்உண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெயும்
கற்றவி காட்டக் கனலுள வாக்குமே.

கல்லா அரசனும் காலனும் நேர்ஒப்பர்;
கல்லா அரசில் காலன் மிகநல்லன்;
கல்லா அரசன் அறம்ஓரான்: கொல்என்பான்
நல்லாரைக் காலன் நணுகிநில் லானே.

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது;
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்;
கல்லாத மூடர் கருத்தறி யாரே.

## தொல்காப்பியம்

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருடம்
ஏது நுதலிய முதுமொழி.

## இளம்பூரணம்

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசான் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையார் தம்மொடும் பயிறல்
வினாதல், வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.

## நன்னூல்

உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா— மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்கும் நூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்கும் நூல்.

களி, மடி, மானி, காமி, கள்வன்
பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமாறு உளத்தன், தறுகணன், பாவி
படிறன், இன்னோர்க்குப் பகரார் நூலே.

கோடல் மரபே கூறும் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி, அவன் குறிப்பில் சார்ந்து
இருவன இருந்து சொல்எனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகிச்
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவி வாயாக நெஞ்சு களன்ஆகக்
கேட்டவை கேட்டவை விடாது உளத்துஅமைத்துப்
போஎனப் போதல் என்மனார் புலவர்.

## இலக்கணக்கூற்று

சிலநாள் பழகின் சிலவும் பலியா,
பலநாள் பழகின் பலிக்கும் என்க;

விரைவால் பார்க்கின் தெரியாது ஒன்றும்
விரையாது ஏற்கின் கருகாது என்க;
வருவதில் கருத்தினை மட்டுப் படுத்தி
வந்ததில் சிந்தையைச் சிந்தாது இறக்குக.
நூலினை மீளவும் நோக்க வேண்டா—

சூத்திரம் பலகால் பார்க்கவே துணிக,
மாரிபோல் கொடுப்பினும் மந்தனை விட்டு
சூரியன் உடனே கொடுத்தும் பழகுக
சொல் பயில்விப்பவன் எப்படிச் சொற்றானான்
அப்படி ஒழுகி அரும்பொருள் பெறுக.

## புறநானூறு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே,
பிறப்புஓர் அன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்,
ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே;

## நச்சினார்க்கினியம்

ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருக நூலில் பிழைபாடு இலனே.
முக்கால் கேட்பின் முறை அறிந்துரைக்கும்
ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
காற்கூறு அல்லது பற்றலன் ஆகும்.

அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்.
பிறர்க்குரை இடத்தே நூற்கலப். பாகும்
திறம்பட உணரும் தெளிவி னோர்க்கே.

## சிலப்பதிகாரம்

நல்லோர் அவைக்களம் அகலாது அணுகுமின்.
தீயோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்.

## மணிமேகலை

பேதமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள உணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள அருவுரு மீளும்
அருவுரு மீள வாயில் மீளும்
வாயில் மீள ஊறு மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளும் கருமத் தொகுதி மீளத்
தோற்றம் மீளும் தோற்றம் மீளப்
பிறப்பு மீளும், பிறப்புப் பிணி மூப்புச்
சாக்காடு அவலம் அரற்றுக் கவலை
கையாறு என்றிக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும் இவ் வகையான் மீட்சி.

## புறப் பொருள் வெண்பா மாலை

புரிவின்றி யாக்கைபோல் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங்கு அறி...

## சீவகசிந்தாமணி

கைப்பொருள் கொடுத்துக் கற்க
கற்றபின் கண்ணு மாகும்,
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின்
மெலிவிற்கோர் துணையு மாகும்,
பொய்ப் பொருள் பிறகள் பொன்னும்
புகழுமாந் துணைவி யாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர்
இரங்குவ தென்னை என்றான்.

இழுதன்ன வெண்ணிணத்த செந்தடிக்கே
ஏட்டைப்பட்டு இருப்பில் போர்த்தப்
பழுதெண்ணும் வன்மனத்தார் ஒட்டைமரச்
செவியர் கேளார்; பால் போன்று
ஒழுகி அமுதூறும் நல்லறத்தை
ஓர்கிலர் ஊன்செய் கோட்டக்குக்
கழுகுண்ண வள்ளூர மேசுமந்து
புள்ளிற்கே புறம்செய்கின்றார்.

## பெருங்கதை

கற்ற மாந்தரைக் கண்எனக் கோட....

நூற்படு புலவன் சொன்ன
நுண்பொருள் நுழைந்து...

நுண்ணுனர்மன்னன் தன்ஒப் பாகிய
கண்ணுளர் நுட்பத்துக் கருத்து நோக்கி
நூற்கண் நுனித்த நுண்ணுணர்வு எண்ணத்தின்
யூகிதன் வயின் ... ... ...

சிதைபொருள் இன்றி செந்நெறி தழீஇ
உதையத்து இவரும் ஒண்சுடர் போல
எல்லா மாந்தர்க்கும் இருள்அடி விளக்கும்
செல்லாறு இதுவெனச் சொல்லுதல் வேண்டிச்
சாலவை நாப்பண் சலத்தில் தீர்த்த
கேள்வி யாளர்............

## இராமாயணம்

பெருந்தடம் கண்பிறை நுதலார்க் கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

## கந்தபுராணம்

மாற்படு புத்தியின் மறுவில் சேதனம்
பாற்படும் உயிர்க்கெலாம் பவத்தின் மாண்பயன்
நூற்படு கல்வியின் நுவல்விளத்தினின்
மேற்படு இன்புதில் விழுவதில் லேயே.

திருமைகொள் வளவனோடு தீதில் கல்வியாம்
இருமையின் ஒன்றினை எய்திடாது எனின்
அருமை கொள் அவ்வுயிர் அதனின் ஆற்றவும்
பெருமையுடையது பேயின் தோற்றமே!

## விநாயக புராணம்

உடல்வயத் தாகும் சாதி உயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்
திடமுற உயிரினோடு செல்லுறும் கல்வி தம்மால்
இடர்தரு பெருமை எய்தார் ஆதலால் அகக்கண் ணாகித்
தொடர்புறும் கல்வி கல்லாத் தொழிலினை விடவே
வேண்டும்.

வறுமையில் மடமை தன்னுல் வருந்தினர் கழியும் காலே
இறுதிசெய் துணையாம் கற்ற உணர்வினே வளர்க்கு
மென்றும்
இறுதிஇல் லாத இன்பம் ஈட்டும் ஆதலினுற் கற்று
மறுமவறு ஒழுக்க முள்ளார் வாய்மொழி கேட்டல்
வேண்டும்.

இழிந்தவன் உயர்ந்த தொன்றை இயம்பினும் உயர்ந்தோன்
வாயின்
இழிந்ததொன் றறினும் உள்ள இயல்பறிந்தோம்பி நீக்கிப்
பொழிந்தெனப் பிறர்தாம்கூறும் புலப்படாப் பொருளும்
ஒள்ளி
வழிந்தெனத் தெளியக் கேட்போர் மனம்கொளப் புகறல்
வேண்டும்.

## திருக்குற்ருலப் புராணம்

இருவிழிகள் வான்முகத்தில் இருந்தாலும்
வானிரவி எழுந்தால் அன்றிக்
கருதுநிலப் பல்பொருளும் காண்டல்அரி
தாம்உலகில் கண்போல் யாரும்
பெருகிய செல்வமும் அறிவும் பெற்ருலும்
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் எறிய பாவம் இம்மை மறு
மையும் வீடும்தெரியா வன்றே.

## கூர்மபுராணம்

நூல்பல கற்ருே னேனும் பொருள் நுனிந்து
அறியான் எனினும்
மாலொடும் வாளா கத்து மாநிறக் காகம்போல் வான்
ஏல்வுறக் கற்ற நூலின் பொருள்தெரிந் திருநூல் சொன்ன
சீலமே ஒழுகு கின்ருேன் சிவனடி நீழல் சேர்வான்.

பொருவி லாவிதி காச புராணங்கள்
தெருலு மாந்தர் சிறப்புள ராகுவர்
தரும நூலும் புராணத்தின் தன்மையும்
கருதி ஓர்ந்தவரே கலை வல்லரே!

### தண்டி மேற்கோள்

மனைக்கு விளக்கம் மடவார்;:மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்— மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு.

### உபதேசகாண்டம்

கற்றி லாய்கலை கற்றுண ரார்முகம்
உற்று நோக்கின் மயானத்தை ஒக்குமால்
பெற்று ளார்பெறும் பேறுதம் காதலர்
சொற்ற கல்வியில் தூயர்என் றேதலே.

### தாயுமானர்.

கற்றதும் கேட்டதும் தானே எதுக்காகக்
    கபடம் என்றுருட்டுதற்கோ நல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு
    குணம்குறியற் றின்பநிட்டை கூட அன்றோ! —

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லார்கள்
கற்றும் அறிவில்லாத என்
கன்மத்தை என்சொல்கேன் மதியை என் சொல்லுகேன்.

"'கற்றதும் கேட்டதுந் தானே எதுக் காகக்
குற்றம் குறைந்து குணமேலிடும் அன்பர் கூட்டத்தையே
முற்றும் துணையென நம்புகண்டாய் சுத்த மூடநெஞ்சே!
கற்றாலும் கேட்டாலும் காயம் அழியாத சித்தி
பெற்றாலும் இன்பம் உண்டோ? பேசாய் பராபரமே!

"வல்லவர்பால் கல்வி மதம் ஆணவம் போக்கும்
அல்லவர் பால் கல்வி அவையாக்கும் —நல்லிடத்தில்!
யோகம் பயில்வார் உயர்ந்தோர் இழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து."

## வில்லி பாரதம்

குலமிகவுடையர் எழில்மிகவுடையர்
குறைவில் செல்வமும்மிக வுடையர்
நலமிக வுடையர் என்னினும் கல்வி
ஞானமற் பமுமிலா தவரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மனமிலா மலரென மதிப்பேன்
சலமிகு புவியில் என்றனன் வாகைத்
தார்புனை தாரைமா வல்லான்.

## நீதிசாரம்.

கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு- நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்கு
அநந்தம் விழிஎன் றறி.

## நீதிவெண்பா

ஆனை மருப்பும் அருங்கவரி மான்மயிலும்
கான வரியுகிரும் கற்றோரு - மானே
பிறந்த இடத்தன்றிப் பிறிதொரு தேசத்தே
சிறந்தஇடத் தன்றோ சிறப்பு

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
யாக்கைநயத் தாலறியல் ஆகாதே- காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு.

## விவேகசிந்தாமணி

வெள்ளத்தால் அழியாது வெந்தழலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் இயலாது, கொடுத்தாலும்
நிறைவொழியக் குறைபடாது,
கள்ளத்தார் எவராலும், களவாட
முடியாது, கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெங்கும்
பொருள்தேடி உழல்வ தென்னே.

## கயிலாசநாதர் சதகம்.

கடலுலகில் உற்றபொருளுக் குளேநன்மைதரு
கல்விநிலை பெற்ற பொருளாம்
கனலினால் உருகாது புனலினால் கரையாது
கள்ளரால் திருடொணாது,

திடமான ராசாதி ராசரா லும்அதைத்
தீண்டிச் சிதைக் கொணாது,
செயன்மிக்க மாதரால் சேதமா காதொருவர்
செலவிடில் குறைவுறாதாம்;

அடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
அளவிடவும் முடியாது காண்,
அப் பொருளினிற் பெருதிப்புவியில் அலைகின்ற
அற்பருறு பயனென் கொலோ?

கடகயம் உரித்துடலினில் தரித்திருதேவ
கற்பகவிரா சமேவும்
கங்கைபுனை ஈசனே! மங்கை மகிழ்நேசனே
கயிலையங் கிரிவாசனே.

மைந்தருக்கு வித்தைபொருள் எழில்கீர்த்தி
சுகபோகம் மற்றும் நல்கும்
தந்தைதாய் குருதெய்வம் தானாகும்
பரதேசம் தனக்கு நட்பாம்
எந்தராசரும் மதிக்கச் செயும்மதற்குச்
சமானம் ஒன்றுமில்லை மேலாம்
அந்தவித்தை கல்லாதான் அறிவிலா
மிருகசெந்து வாகும் தானே,

### தனிப் பாசுரத் தொகை

கல்வியே மக்கள்தம் கண்ணே, புலவர்தம்
செல்வியே, மனத்தின் செவ்விய உணவே,
நின்னொடு பயிறல் மன்னிய மாந்தர்
தமக்கும் பிறர்க்கும் தனிப்பே ரின்பம்.
கரும்பயி றற்குக் கைக்கூலி போலத்
தரும்பொருளே, உயர் தகைமுத்தி வித்தே!
பரந்த பாரினும் விரிந்த வானினும்
பாவலர் நூலினும் பரிவுடன் மேவி
ஆவலின் விளையாட் டயர்தரு மங்காய்!

கருத்தினில் களிப்பை உரைப்பை, ஆற்றுரை
கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக்
கெதுவும் என்கொல் அநேகர்
ஊகமின்றி நாளுலப்பி விட்டனரே.

### நீதிநெறிவிளக்கம்.

கடலே யனையம்யாங் கல்வியாலென்னும்
அடலே றனைய செருக் காழ்த்தி-விடலே
முனிக்கரசு கையான்முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

அறம் பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கலலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூ ங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

தொடங்குங்காற் றுன்பமாயின்பம் பயக்கும்
மடங்கொன்ற றிவதற்றுங்கல்வி—நெடுங்காம
முற்பயக்குஞ் சின்னீரவின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லன் வெறுக்கையா மாணவை மண்ணுறத்துஞ்
செல்வமும் உண்டு சிலர்க்கு.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சார் வாகுலச் சொல்லு—நவையஞ்சி
ஈத்துண்ணுர் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனினில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னும் துண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

நெடும்பகற் கற்ற வகையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி—கடும்பக
வேதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்.

எனைத்துணைய வேனுமிலம் பட்டார் கல்வி
தினைத்துணையஞ் சீர்ப்பா டிலவா—மனைத்த
மாண்பில் லாயின் மணமகன லற்றம்காண்
பூண்ட புலப்படர போல்.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோர ணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டா, யாரே
அழகுக் கழகுசெய் வார்.

கல்வியுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு—மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற்றும்
தலைவணங்கித் தாழப் பெறின்.

## நீதிவெண்பா,

வல்லவர்பாற் கல்வி மதமாண வம்போக்கும்
அல்லவர்பாற் கல்வி யவையாக்கும்- நல்லிடத்தில்
யோகம் பயில்வாருயர்ந்தோ ரிழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து.

தீயவர்பாற் கல்வி சிறந்தாலு மற்றவரைத்
தூயவரென்றெண்ணியே துன்னற்க- சேயிழையே
தண்ணொளிய மாணிக் கஞ்சர்ப்பந் தரித்தாலு
நண்ணுவரோ மற்றதனை நாடு.

போற்றுகுருகிளைஞர் பொன்னாசையோர்க்கில்லை
தோற்று பசிக்கில்லை சுவைபாகந்- தேற்றுகல்வி
நேசர்க்கிலை சுகமு நித்திரையுங் காமுகர்தம்
ஆசைக்கிலைபயமா னம்.

## கல்லாடம்

நிலையினில் சலியா நிலைமை யானும்
பலவுலகு எடுத்த ஒருதிறத் தானும்
நிறையும் பொறையும் பெறுநிலை யானும்
தேவரும் மூவரும் காவ லானும்
தமனியப் பராரைச் சைல மாகியும்
"அளக்க என்று அமையாப் பரப்பின தானும்"
அமுதமும் திருவும் உதவுத லானும்
பலதுறை முகத்தோடு பயிலுத லானும்
முள்ளுடைக் கோட்டு முனைஎறி சுறவம்
அதிர்வளை தடியும் அளக்கர் ஆகியும்

நிறையுளம் கருதி நிகழ்ந்தவை நிகழ்பவை
தருதலின் வானத் தருஐந்து ஆகியும்
மறைவெளிப் படுத்தலின் கலைமகள் இருத்தலின்
அகமலர் வாழ்தலின் பிரமன் ஆகியும்
உயிர்பரிந்து அளித்தலின் புலமிசை போக்கலின்
படிமுழுது அளந்த நெடியோன் ஆகியும்
இறுதியில் சலியாது இருத்தலானும்
மறுமை தந்து உதவும் இருமையானும்.
பெண்ணிடம் கலந்த புண்ணியன் ஆகியும்.
அருள்வழி காட்டலின் இருவழியாகியும்
கொள்ளுநர் கொள்ளக் குறையாது ஆதலின்
நிறையுளம் நீங்கா குறையருள் ஆகியும்
அவைமுத லாகி இருவினை கெடுக்கும்
புண்ணியக் கல்வி!

## தருமதீபிகை

காட்சி புரிந்தருளும் காமர் விழிபோல
மாட்சி புரிந்து மனுக்குலத்தை—ஆட்சியாப்
பல்வழியும் ஊக்கிப் பயன்காட்டி நிற்றலால்
கல்வியும் செல்வமும் கண்.

செல்வம் வழிமுறையில் சேர்ந்துவரும் கல்வியோ
புல்லிப் பயின்றோர்க்கே போதுமால்—ஒல்லையினில்
ஓதி உயர்க ஒழித்தாயேல் நீ என்றும்
பேதையாய் நிற்பாய் பிறழ்ந்து.

வாய்பேசும் மாட்சியினால் மக்களுயர்ந் தார்விலங்கோ
வாய்பேச மாட்டா வகையிழிந்த—ஆய்வகையில்
கல்லாமல் சொல்லளவில் காணுமகன் பேசுகின்ற
பொல்லா மிருகம் புரை.

கல்லாதான் கல்லாய்ச் சழிந்திழிந்தான்; கற்றவனோ
எல்லொளி வீசி எழில் மிகுந்து—நல்ல
மணியாய் உயர்ந்தான்; மதிகெட்டு நின்றார்
பிணியாய் இழிந்தார் பிறழ்ந்து.

செல்வம் குல முதலாம் சீரெல்லாம் சேர்ந்துகெடும்
கல்வியொன் றின்றேல் கடையனாய்—நல்ல
விழியிரண்டும் இல்லாத மெய்யேபோல் வெய்ய
பழியே மிகுந்து படும்.

மனித உருவை மருவினும் கல்வி
இனிதமையா தாயின் இழிவே மனிதன்தான்
தெய்வம் எனவே சிறப்பருளும் கல்விதனை
எய்தார் இறந்தார் இழிந்து.

உடலுக் குணவுபோல் ஒண்மதிக்குக் கல்வி
அடலுள் அருளும் அதனால்—படமகன்று
தேசுடைய ராகிச் சிறந்த திறல்மிகுந்து
ஓசையுடன் நிற்பர் உயர்ந்து.

மூடன் எனுமொழியை மூடருமே கேட்கமனம்
கூடா தழன்று கொதிக்கின்றார்—பீடுபெறக்
கற்றவ்ழி விவைக் களையா தயர்ந்து நின்று
மற்றவரை நோதல் மடம்.

செல்வன் என ஒருவன் சேரவரின் ஆயிரம்பேர்
அல்லல் வறுமை அடையவரும்—கல்விமான்
என்ன ஒருவன் எழினே அறிவுபவர்
துன்ன வருவர் தொடர்ந்து.

தாய்போல் இனிதோம்பும் தந்தைபோல் நன் காற்றும்
தூய மனைபோல் சுக மருளும்—ஆ''நலம்
எல்லாம் அருளி இதமளிக்கும் கல்வியிது
வல்லார்க் கெவைதாம் வரா.

பூவேந்தர் எல்லாரும் போற்றிப் புகழ்ந்தேந்தும்
பாவேந்தர் என்னும் பதமுடையார்—நாவேந்தித்
தந்த அறிவுணவே தாரணியில் யாவருக்கும்
அந்தண் அமிர்தம் அறி.

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளி தான்
விண்ணளவாயிற்ருே விளம்பு

## வீரபாண்டியம்

"கற்றக்கல்வியைக் கதிதரு நெறிகளில் செலுத்தி
உற்ற பேரின்ப உறுதியை அடைந்தவன் உயர்ந்தான்.

பெற்ற இப்பெரும் பிறவியின் அறிவுக்குப் பிறவி
அற்று நிற்றலே அல்லதொன் றில்லைகாண் அறியின்'

பாம்புண்ட நீர்எல்லாம் நஞ்சாம்; பசுவுண்ட
தேம்படு தேண்ணீர் அமுதமாம்—ஓம்பற்கு
ஒளியாம் உயர்ந்தாற்கண் ஞானம்; அதுபோல்
களியாம் கடையாயார் மாட்டு.

## இந்தியத் தாய் நிலை

பாலூட்டிச் சோறூட்டிப் பசுந்தமிழை
வளர்ப்பதுபோல் பரிவுகாட்டி
மாலூட்டி திரிகின்ற மதியுடையீர்!
மதியொன்று மதித்துக் கேண்மின்!
நாலூட்டி நலமூட்டி நவமூட்டி
வளர்தமிழை நாடி நீங்கள்
தாலூட்டிப் படியுங்கள் தாயன்பு
புரியுங்கள் தகைமை யாமே.

ஒரு நூறு குறளேனும் உள்ளத்தில்
பதிவு செய்க; உயர்நூல் தம்முள்
இருநூறு கவிகளையும் இயல் சங்க
நெறிகளையும் எண்ணி ஆய்ந்து

பெரு நீர்மை யுடன்வாழ்க; பேருலகில்
மனிதனாய் பிறந்தும் பேசும்
திருவான மொழிபயிலார் திருவிலிக
ளாயிழிவார் தெளிக தேர்ந்தே.

## தேவநேயப் பாவாணர்

பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார்கல்வி
மிகுத்ததினால் ஏது பயன்?

## கோவேந்தன் குறள்

வாழ்க்கைக்கு ஒருவனை வார்த்துப் படைப்பதே
சூழ்கல்வி செய்யும் துணை.

வாழ்வை விளக்குவதாய் செம்மைப் படுத்துவதாய்
வீழ்வைத் தடுப்பது கல்வி.

மாந்தனை மாந்தனாய் மாற்றிடும் கோட்பாட்டை
ஏந்துக கல்விக் குறி.

விரிவும் உயர்வும் பயனுடைய வீச்சும்
தருவது கல்வித் தரம்.

சிறந்ததை மேலும் சிறந்ததாய்ச் செய்யும்
அறந்தானே கல்விக்கு அழகு.

கல்விசேர் வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை, பின்
புல்லுவது எல்லாம் புறம்.

ஒழுக்க உயர்வுக்குப் பண்பாட்டின் ஒப்பில்
விழுப்பம் தருவது கல்வி.

தனியாள் உயர்வும் சமூக உயர்வும்
இனிதீயும் கல்விஎழுச்சி.

கல்விச் செல்வம்

வீட்டு வளர்ச்சிக்கும் நாட்டு வளர்ச்சிக்கும்
ஊட்டம் கல்வி உயிர்ப்பு.

கல்வித் திறன்இன்றேல் முன்னேற்றம் காணலில்லை
நல்விச்சை நாளும் பயில்.

நாட்டின் அரசியல் நாட்டின் பொருளியல்மேம்
பாட்டில் செயும்கல்விப் பண்பு.

அறியாமை தீர்தொறும் தீர்தொறும் கல்விக்
குறிக்கோண்மை வாழ்வுயர்த் தும்.

இன்பமும் நன்மையும் எய்திட வாழ்க்கையில்
அன்பையும் உண்மையும் சேர்ந்திடும் கல்வியை
என்றும்நீ ஏற்க முனைந்து.

சமையத்தைச் சார்ந்தபாழ்ங் கல்வி. நமைஎன்றும்
மீட்காது மாட்டும் துயர்.

பொதுவுடமை நாட்டின் புதுவாயில் காண
திறவுகோல் கல்வி எழுச்சி.

உலகின்பம் காண உலகை உயர்த்த
நலன்எங்கே கல்வியில் தான்.

கல்வியின்றி இல்லை அறிவு, பொதுவுடமை
நல்குமே மாந்தர் நலம்.

பொதுவுடைமை ஒன்றே அறிவுடைமை கல்வி
புதுவுடைமை யாகப் பெறின்.

நடைமுறை வாழ்விற்குக் கல்வியே நல்பொது
வுடைமை வழங்கும் உயிர்.

புத்துணர்வு புத்தெழுச்சி கல்விப் புரட்சியில்
ஒத்தெழுந்தால் ஓங்கும் உலகு.

# அறிஞர் நெஞ்சில் கல்வி

வாழ்க்கையின் வளப்பைப் போதிப்பதே, உண்மையின் இணைப்பைத் தெரிவிப்பதே கல்வியின் நோக்கம்.

ஒரே மாதிரியான போதனை முறையைக் கடைப் பிடிப்பதைவிடப் பண்பாட்டின் உயிர்ப்பாகக் கல்விமுறை உருக் கொள்வதே இன்றியமையாத் தேவை.

மனத்திற்கு உரிமையும் விடுதலையும் தருவதே கல்வி.

—இரவீந்திரநாத்தாகூர்

கல்வியின் நோக்கம் அறிவு தேடுவது ஆகும்.

எல்லாக் கல்வியின் நோக்கமும் மனிதனை உருவாக்கவே இருக்க வேண்டும்.

—விவேகாநந்தர்

உழவனின் மகன் கல்வி கற்று அறிவைத் தேடி அரசில் அமைச்சனாக முடியும். ஆனால் உயர் குடியில் பிறந்தவனிடம் கல்வி இல்லாவிட்டால் மோசடிகள் செய்வான், அதுவும் முடியாவிட்டால் பிச்சை எடுப்பான்.

ஓர் அரசன் தன் மகன் கழுத்தில் ஒரு வெள்ளித் தகட்டைக் கட்டித் தொங்க விட்டு அவனைப் பள்ளிக்கு அனுப்பினான், அந்தத் தகட்டில் எழுதிய மொழியிது: ஆசிரியன் மாணவனிடம் காட்டும் கண்டிப்பைவிட தந்தை மகனுக்குக் கொடுக்கும் சலுகைகள் தாம் பின்னர் துன்பமான முடிவுக்கு இட்டுச் செல்லும்.

—சா ஆதி.

நாம் அறிவாளியாகவும், தேவதையாகவும் வளர்வது தான் கல்வியின் பயனாகும்.

கல்வி சிறந்த அணிகலன், தன்னைவிடப் பிறர்க்கு அணிவித்துப் பார்ப்பதில்தான் பயன் உண்டாகும்.

—மாங்தேன்.

சட்டம் இயற்றுவோன் எல்லாவற்றிலும் முதன்மையாக இளைஞர்களின் கல்வியைப் பற்றிக் கவனிக்க வேண்டும்; கல்வியைப் புறக்கணிப்பது அரசுக்குக் கேடு பயக்கும்.

குடிமகன் எந்த அரசாங்கத்தின் கீழ் வாழ்கிறானோ அந்த அரசுக்கேற்ற வகையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

—அரிஸ்டாடில்

கல்லூரிக் கல்வி, தேர்வுமுறை வேறு எதைவிடச் சிறந்தது மில்லை, என்றாலும் வாழ்க்கை அனுபவ மில்லாமல் எந்த மனிதனும் கல்வியறிவு பெறுவதில்லை.

கல்வி என்பது ஒருவனுடைய இளமையோடு மட்டும் தொடர்புடையதன்று, வாழ்நாள் முழுதும் கற்கக் கூடியது.

—பெர்னார்டுசா

வெறும் செய்திகளைத் தொகுத்துத் தருவதோடு அமையாது உலகப் பொருள்களோடு எல்லாம் ஒன்றுபட்ட வகையில் நமது வாழ்வை இணையச் செய்வதே விழுமிய கல்வியாகும்.

ஒரு குழந்தை கனவானாகவோ, சீமாட்டியாகவோ இருக்கும் படி கல்வி போதிக்க வேண்டாம்; ஆனால் மனிதனாகவும் மனிதியாகவும் இருக்கக் கற்பியுங்கள்.

—இசுபென்லெர்

ஒவ்வொரு தேசத்தின் மக்கட் சமுதாயத்தினுடைய பாதுகாப்பும் கதியும் மக்களுக்கு அளிக்கும் நிறைவுள்ள கல்வியைப் பொறுத்தேயுள்ளன.

—கோதே.

பள்ளிக்கூடங்களே மக்கள் ஆட்சி முறையில் அமையும் கோட்டைக் கொத்தளங்கள். —ஓரசு மான்.

மற்றெல்லாப் படிப்புகளைவிட, மனிதன் எப்படி இருக்க வேண்டும், அவன் எப்படி வாழ வேண்டும் என்பது மிகச் சிறந்தது; உயர்நோக்கமுள்ளது. அத்துடன் அது, மற்றெல்லா படிப்புகளையும் விட முக்கியமானது; அதில் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

உடலுக்கும் உள்ளத்திற்கும் வேண்டிய எல்லாவித அழகையும் திறமைக்கு ஏற்றவாருள்ள அனைத்து ஒழுங்கு கலையும் தருவதுதான் ஒரு நல்ல கல்விக் கொள்கையாகும்.

பிளேட்டோ

ஒவ்வொரு தனியாள் வாழ்க்கையையும் இன்பமுடையதாயும் நன்மையுடையதாயும் மாற்றியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் கல்வி அமைதல்வேண்டும்.

-பெஸ்டலசி

கல்விக்கு முதலிடம் தருவதே மற்றெல்லா வேலைகளுக்கும் முதலிடம் தருவதாகும்.

-நியூமென்

அமைதியிலும், நெருக்கடியிலும் தனக்குரிய பணிகளையும் பொதுப்பணிகளையும் நீதி வழுவாமலும் அறிவாற்றலோடும் பரந்த உள்ளத்தோடும் செய்விக்க உதவுவதே முழுக் கல்விப்பயன்.

—சான் மில்டன்

கல்வி என்பது இயற்கை நியதிகளின் அறிவாற்றலைப் பற்றிய போதனை.

என்றி எக்சிலி

படித்ததில் மறந்தது போக எஞ்சி நிற்பதே கல்வி.

இரிச்சர்டு இலவிங்டன்

கல்வி என்பது மும்மையுடையது. இயற்கை, மாந்தர் பொருள் எனலாம்.

—உரூசோ

படைப்பதற்காகவே நீ படிக்க வேண்டும். என்றுவது ஒருநாள் வானத்தில் பறக்க விரும்புகிறவன் முதலில் நிற்கவும் நடக்கவும் ஓடவும் ஏறவும் நடனமாடவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

—நியெட்சே

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கற்றுக் கொடுக்கப் படும் பொருள் கல்வியன்று. கல்விக்குரிய கருவியேயாகும்.

நான் புலவனை மதிக்கிறேன். கல்வியனைத்தும், தருக்கங்கள் அனைத்தும், கலைக்களஞ்சியங்களிலோ நூல்களிலோ இல்லை. புலவனின் படைப்பில்தான் அது உள்ளது.

உங்கள் பையனுக்கு நடக்கக் கற்றுக் கொடுங்கள். ஓடுவதற்குத் தானுகவே கற்றுக்கொள்வான்.

—எமர்சன்

அறியாமையைவிடக் கேவலமான அடிமைத்தனம் வேறு எதுவுமில்லை. அறிவுத்தாய் பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளின் பெயர் சுதந்திரம், விடுதலை; உரிமை என்றெல்லாம் குறிப்பிடலாம்.

—இங்கர்சால்

வாழ்க்கைக்கு பயிற்சி பெறுவதுதான் கல்வி.

—வில்மாட்

சரியான கருத்தில், கல்வி பயிற்சி பெறுகிறவரை மனிதன் மனிதனுக மாட்டான்.

கல்விதான் நமக்குரிய அரசியல் பாதுகாப்பு, இந்த ஓடத்திற்கு வெளியே எல்லாம் வெள்ளக்காடு தான்.

—எச். மான்.

மக்கள் தாங்கள் அறியாதவைகளைத் தெரிந்து கொள்ளும்படி கற்பிப்பது கல்வியின் பொருளாகாது; அவர்கள் நடையை மாற்றிச் செம்மையாக நடந்து கொள்ளும்படி கற்பிப்பதாகும்.

—இரசுகின்.

முதலாவதாக மாணவன் தன் தாய் மொழியில் புரிந்து கொள்ளவும், பேசவும், படிக்கவும், எழுதவும் நாம் கற்பிக்க வேண்டும்.

—வெல்சு.

ஒழுக்க நெறியின் வளர்ச்சியே கல்வியின் முழுநோக்கம், அல்லது பெருநோக்கமாயிருக்க வேண்டும்.

—ஓ'சீ.

சர்வ சனக் கல்வியில்லாமல், சர்வ சன வாக்குரிமை ஒரு தீமையாகிவிடும்.

நன்றாகக் கற்பிப்பதானால், எதைக் கற்பித்தாலும் எனக்குக் கவலையில்லை.

—டி. எச். அக்சிலி.

கல்வியின் முழுநோக்கம் மன வளர்ச்சியே.

—எர்வுட் ஆண்டர்சன்.

கற்பிப்பதன் இரகசியம் மாணவனுக்கு மதிப்பளிப்பதில் இருக்கின்றது.

—எமர்சன்.

தேசங்களுக்கு மலிவான பாதுகாப்பு கல்வி.

—பர்க்.

மானிட உள்ளத்தின் கல்வி தொட்டிலில் தொடங்குகின்றது.

—டி. கோகன்.

பொதுக் கல்வியே அரசாங்கத்தின் முதல் இலட்சியமாயிருக்கவேண்டும்.

—நெப்போலியன்.

## கல்விப் பழமொழிகள்

கல்வியே மனிதனை உருவாக்குகின்றது.

வயது வந்தவர்களுக்குச் சிறைச்சாலைகள் கட்டுவதைப் பார்க்கினும், குழந்தைகளுக்குப் பள்ளிகள் அமைப்பது நலம்.

தன் மகனைப் பயனற்றவனுகச் செய்பவன், ஒரு திருடனை வளர்க்கிறான்.

—இங்கிலாந்து.

அதிக படிப்பும், மிகக்குறைந்த படிப்பும் மனவளர்ச்சிக்கு இடையூறுகள்.

—பிரான்ஸ்.

கல்வி செல்வத்திற்கு அணிகலன், வறுமைக்கு அடைக்கலம்.

கற்றவர்களே சுதந்திர முடையவர்கள்.

கல்வியின் வேர்கள் கசப்பானவை, கனி இனியது.

—கிரீஸ்.

மாணவனை மதிப்பதே கல்வியின் இரகசியம்.

பொதுமக்களின் கல்வி அரசாங்கத்தின் முதற் கடமையாயிருக்க வேண்டும்.

மாணவர்களே பிற்கால ஆசிரியர்கள்.

கல்யாணத்தால் கல்வி போம், மனைவி வீட்டுக்கு வந்த பின் எல்லாம் போம்.

—இந்தியா.

முதல் பட்டத்திற்கு படிப்பதுதான் கடினம், அடுத்த பட்டம் தானாக வரும்.

—சீனா.

படிப்பில்லாதவர்கள் உடைகள் அணிந்த கால்நடைகள்.

கவிழ்ந்துள்ள கிண்ணத்துள் கதிரொளி பிரகாசிக்காது.

அறிவுக்கதிர்களை அறுவடை செய்ய கண்ணீர் மழை அவசியமாகும்.

— சீனா

சர்க்கரையின் தந்தை கரும்பு ஆலை.

(இது கல்விக்காகச் சொல்லப்பெறுவது, கரும்பை ஆலையில் பிழிவது போன்றது கல்வி கற்றல்)

—கீழ்நாடுகள்

வளைந்த சழிைய நெருப்பினில் வாட்டினால், நெகிழ்ந்து விடும்.

—ஆப்பிரிக்கா

ஒரு பையனுக்கு கல்வி கற்பிப்பவன் மூன்று பேர்களுக்கு கற்பிக்கிறான்; ஓர் இளைஞன், மனிதன்; வயதானவன்.

இளைஞர்களையும் முயல்களையும் செவிகளைப் பிடித்துத் தூக்க வேண்டும்.

—ஜர்மனி

எழுதப் படிக்கத் தெரிந்தவர்க்கு நான்கு கண்கள் உண்டு.

—அல்பேனியா

சாகும் வரை நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம்.

ரொட்டி இல்லாத போதுதான் மனிதன் படிக்கத் தொடங்கினான்.

—உருசியா

செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்துவிடும். கல்வியை உபயோகித்தால் அதிகரிக்கும்.

—ஆப்பிரிக்கா

கற்றவனுக்கு ஊரெலாம் சுற்றம்.

—தமிழ்நாடு

கல்வி எல்லாம் தரும். ,,

கல்லாடம் கற்றவனிடம் சொல்லாடாதே. ,,

கல்வி இல்லாதவன் கண்இல்லாதவன். ,,

படித்தவனுக்கு இரவிலும் கண் தெரியும். ,,

படிக்காத முண்டம் ஊருக்குத்தண்டம். ,,

கூழ்ப்பானைக்குத் தெரியுமா வாழவைக்கிற கல்வி. ,,

கல்வி யிருந்தால் செல்வம் தானே வரும். ,,

பள்ளிப்படிப்பு புள்ளிக்கு உதவாது. ,,

சின்னவன் படிச்சால் பெரியவனாவான். ,,

★